[1972 சனவரி 29

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

திரு. கே. ஏ. வகாப் : அப்படிப்பட்ட சிலைகளைப் பாதுகாப்பதற்கு அரசு என்ன நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, பேரவையின் முன் வைக்கப்பட்டு இருக்கும் விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அரசாங்கமே சிலைகளை விற்பதற்கான யோசனை எதுவும் இல்லை.

Kalyana Mandapam in Sri Kapaleeswarar Temple

* 157 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Kalyana Mandapam of the Sri Kapaleeswarar Temple in Mylapore is leased at heavy rent;

(*b*) if so, the details thereof; and

(*c*) the details of the steps taken to rent it to poor people?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) & (உ) இவ்வினாவிற்கு இடமில்லை.

THIRU K. M. SUBRAMANIAM : In view of the terrible exploitation by the richer class by constructing *kalyana mantapams* and letting them out at very, very high rates, will this Religions Endowment Department consider constructing small *kalyana mantapams* for poor sections of the public?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, சாதாரண ஏழை எளிய மக்கள் கோவில்களில் சென்று திருமணம் செய்துகொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது. குறைந்த கட்டணமே வசூல் செய்யப்படுகிறது. ஏழை மக்களுக்குப் பயன்படும் வகையில்தான் அமைக்கப்பட்டுள்ளது.

அழகர்கோவிலுக்கு சாலை.

*158 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அழகர்கோவிலில் அடிவாரத்திலிருந்து மலை உச்சிவரை சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?